**செ. கு. எண்: 198** **நாள்: 14.11.2018**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்

அறிக்கை – 14.11.2018

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கோவநாயக்கன்பட்டியைச் சேர்ந்த திரு. சந்திரகுமார் என்பவர், தனது மகன் செல்வன் லோகேஷுக்கு இரத்த புற்று நோய் பாதிப்பு கண்டுபிடிக்கப்பட்டு, பல மாதங்களாக கோயம்புத்தூரிலுள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை அளிப்பதற்காக தான் கடன் வாங்கி ஏழு லட்சம் ரூபாய் வரை செலவு செய்து விட்டதாகவும், எலக்ட்ரீசியன் வேலை செய்யும் தனக்கு இனியும் மருத்துவ செலவு செய்ய வசதியில்லை எனவும், தன்னுடைய மகனுக்கு தொடர்ந்து சிகிச்சைக்கு உதவ வேண்டும் எனவும் நாளிதழ்கள் மூலம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

திரு. சந்திரகுமார் அவர்களின் வேண்டுகோளினை நாளிதழில் இன்று (14.11.2018) காலை நான் பார்த்தேன். செல்வன் லோகேஷுக்கு ஏற்பட்டுள்ள இரத்த புற்று நோயை குணப்படுத்துவதற்கு, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின் கீழ் கோயம்புத்தூரிலுள்ள தனியார் மருத்துவமனையிலேயே தொடர்ந்து சிறப்பு சிகிச்சை அளித்திட, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை செயலாளர் அவர்களுக்கு நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**